# ஞானம்
# வேண்டல்

அசதோமா சத்கமய
தமசோமா ஜோதிர்கமய
ம்ருத்யோமா அம்ருதம் கமய

மெல்ல மெல்ல வெங்கதிர் போல்
என் மனதுள் நீ புகுந்தாய்
உள்ளம் என்னும் கருங்குகையில்
என் இருப்பு காண வைத்தாய்
விழி மலரே தேன் சுவையே
யோகிராம் சுரத்குமாரா
உண்ணாமல் இனிக்குதையாய்
உன் நாமம் உருகுதையா

(அசதோமா)

ஐம் புலனும் ராட்சஸர்கள்
அறுசுவையும் பேய் கணங்கள்
என் காதல் மாமிசங்கள்
நீயறுக்க நான் இறந்தேன்
என் மரணம் உன் மடியில்
என் விதியோ உன் விரலில்
என் மனமோ உன் ஒளியில்
உன் கொடியோ என் சிரசில்

(அசதோமா)

கனக மணிச் சக்கரங்கள்
கண் முன்னே நடமாட
பெருவெளியின் சங்கொலியோ
என் செவியில் இசைபாட
வான் நீலம் வண்ண மயம்
என்னுள்ளே எனையிழுக்க
நானதுவே நீயதுவே
யோகிராம் சுரத்குமாரா

(அசதோமா)

தாய் சொல்ல அறிந்த மொழி
தந்தை சொன்ன குறுக்கு வழி
ஊர் சொன்ன பெரும் புரளி
எக்கதையும் எனக்கில்லை
சொல்லாமல் நீ சொன்ன
சொர்க்கத்தை நானடைந்தேன்
கல்லாலின் ஈஸ்வரனே
யோகிராம் சுரத்குமாரா

(அசதோமா)
நீ யொன்றே ப்ரமமயம்
நீ யொன்றே ஞானமயம்
நீ யொன்றே நாத மயம்
யோகிராம் சுரத்குமாரா

(அசதோமா)